**முதன்மைச் செயலர்/வணிகவரி ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை.**
**வணிகவரி ஆணையர் அலுவலகம், எழிலகம், சேப்பாக்கம், சென்னை–600 005.**

**முன்னிலை: திரு.எம்.ஏ.சித்திக். இ.ஆ.ப.,**
**முதன்மைச் செயலர்/வணிகவரி ஆணையர்.**

செ.மு.ஆ. எண்.வநவா/41–1/2021 நாள்: 14.07.2021.

| | |
|---|---|
| **பொருள்**: | தமிழ்நாடு வணிகர் நல வாரியம் – இணைய வழியில் புதிய உறுப்பினர் சேர்க்கை –மூன்று மாதங்களுக்கு சேர்க்கைக் கட்டணத்திலிருந்து விலக்கு – மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணை – சேர்க்கைக் கட்டணம் விலகளித்து செயல்முறைகள் –தொடர்பாக. |

*****

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தேர்தல் வாக்குறுதியில் தெரிவித்தது போல் வணிகர் நல வாரியத்தை சீரமைத்து உறுப்பினர் சேர்க்கையை செம்மைப்படுத்தி, திறம்பட செயல்படும் வகையில் சிறு மற்றும் குறு வணிகர்களின் வாழ்வாதாரத்திற்கு உறுதுணையாக இந்த வாரியத்தின் மூலம் நலத்திட்டங்களை செயல்படுத்த ஏதுவாக சரக்கு மற்றும் சேவை வரி (GST) சட்டத்தில் பதிவுபெற்று "விற்று முதல் அளவு" (Turn Over) ரூ.40,00,000/– (ரூபாய் நாற்பது இலட்சம் மட்டும்) உட்பட்ட சிறு வணிகர்கள் மற்றும் சரக்கு மற்றும் சேவை வரி (GST) சட்டத்தின் கீழ் பதிவு பெறாத குறு வணிகர்கள் இந்த வாரியத்தில் உறுப்பினர்களாக சேர, சேர்க்கைக் கட்டணத்தொகையான ரூ.500/–ஐ வசூலிப்பதிலிருந்து மூன்று மாதங்களுக்கு விலக்களித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

2. இதன்பொருட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் ஆணைக்கிணங்க, வரும் 15.07.2021 முதல் 14.10.2021 வரையிலான காலத்திற்கு தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தில் உறுப்பினராக பதிவு செய்யும் அனைத்து புதிய சிறு மற்றும் குறு வணிகர்களுக்கு சேர்க்கை கட்டணத்திலிருந்து விலக்களித்து ஆணையிடப்படுகிறது.

3. அனைத்து இணை ஆணையர்கள் (வ.வ), துணை ஆணையர்கள் (வ.வ) மற்றும் தலைமை வரிவிதிப்பு அலுவலர்கள், இந்த சலுகையினை வணிகர்கள் மத்தியில் தெரிவித்து, விழிப்புணர்வு ஏற்படுத்தி தமிழ்நாடு வணிகர் நல

வாரியத்தில் புதிய உறுப்பினர்களின் சேர்க்கையினை இணைய வழியே மேற்கொள்ளவும், மேலும், அதன் பயன்களையும் பெற நடவடிக்கைகள் எடுக்கவும் இச்செயல்முறை ஆணை மூலம் அறிவுறுத்தப்படுகிறது.

ஒம்/எம்.ஏ.சித்திக்.இ.ஆ.ப.
முதன்மைச் செயலர் / வணிகவரி ஆணையர்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

14.07.21.
முதன்மைச் செயலர் /
வணிகவரி ஆணையருக்காக

14/7/2021

<u>பெறுநர்:</u>

1. அனைத்து இணை ஆணையர்கள் (மா.வ.)
(வணிகவரி கோட்டம் & நுண்ணறிவு கோட்டம்)
2. அனைத்து துணை ஆணையர்கள் (மா.வ)
(வணிகவரி கோட்டம் & நுண்ணறிவு கோட்டம்)
3. அனைத்து தலைமை வரிவிதிப்பு அலுவலர்கள், வரி விதிப்பு அலுவலகம்.

<u>நகல்:</u>

1. அனைத்து கூடுதல் ஆணையர்கள் (மா.வ.), முதன்மைச் செயலர்/வணிகவரி ஆணையர் அலுவலகம், சேப்பாக்கம், சென்னை.
2. இணை ஆணையர் (மா.வ.)(கணினி மையம்) (உரிய நடவடிக்கைகாக).
3. தனி உதவியாளர், முதன்மைச் செயலர்/வணிகவரி ஆணையர், வணிகவரி ஆணையர் அலுவலகம், சேப்பாக்கம், சென்னை.
4. தனி உதவியாளர், இணை ஆணையர் (நிர்வாகம்), வணிகவரி ஆணையர் அலுவலகம், சேப்பாக்கம், சென்னை.